# உத்திரம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ உத்திரம் சக்தி**

பரிபவ விமோசனம், குணரகிதம்

விசுவம், பதித்துவபரோபரீணம்.

**3. திருப்பாவைபாசுரம் – 29 உத்திரம் இயல்பு**

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துஉன்

பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்

பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ

குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது

இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்.

மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/Ae7zMIB2MCE**

**விளக்கம் :**

எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும் உந்தனோடு உற்றோமே ஆவோம் என்கிற செயல் திட்டத்தை பதிவு செய்யும் மன உறுதி, உத்ரத்திற்கு இருப்பதினால் தான் இந்த நக்ஷத்திரங்கள் உலகத்திற்கே வழிகாட்டுகிறது. அதே நேரத்தில் உலகத்தில் பல்வேறு ஆசைகள் நோக்கங்கள் படிப்புகள் கொள்கைகள் என இருந்தாலும், அவற்றையெல்லாம் மாற்றி மற்றை நம்

காமங்கள், மாற்றேலோ ரெம்பாவாய் விமோசனம் தேடும் உத்திரம் வாழ்க, வாழ்க! 28 பாடல்கள் பாடி சரியான தருணத்தில் குற்றங்களுக்கு மன்னிப்பும் கேட்டு கோவிந்தன் எனும் அருளையும் பெற்று, காரியத்தை சாதிப்பதில் உத்ரமே வல்லவர். நாங்கள் மெய்துண்ணும் குலத்தில் பிறந்தாலும் அதாவது வயிற்று பிழைப்பிற்காக எந்த தவறுகள் செய்தாலும், அவற்றை எல்லாம் மன்னித்து பொறுத்தருள் செய்து, உன் பணி செய்ய எங்களுக்கு உணர்வூட்ட வேண்டும். இப்பிறவியில் மட்டும் அல்ல. இனிவரும் பிறவிகளும் கோவிந்தா உன் பணி செய்யவே எங்களுக்கு புத்தி புகட்ட வேண்டும். எங்கள் காமங்களை மாற்றி உன் பணி ஆகமங்களாக நிறைவேற்ற எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்;

இந்த தொலைநோக்கு செயல் திட்டத்தை பரிபவ விமோசனமாக நெஞ்சில் பதித்து செயல்படுபவர்களே உத்ர நக்ஷத்ரமாகும்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் என்னவென்றால் உலகத்தில் அனைத்து விருப்பங்களையும் எங்களுக்கு நிறைவேற்ற வேண்டும்.

மேய்த்துண்ணும் உலகத்தில் நீயும், நானும் ஒன்றாக பழகியதால், எங்கள் கோரிக்கைகளை புறந்தள்ளி விடக்கூடாது. குணத்தால் ஒன்றுபட்ட ஜீவாத்மா, பரமாத்மா குணரகிதமாக உலகத்தில் அனைத்து சுகங்களையும் கண்டோம். இந்த பரோபரீணம் உலகத்தில் உன்னதமானது. மேலும் இனி எத்தனை பிறப்பு எடுப்பினும், அத்தனை பிறப்புகளிலும் உன்னோடு உறவு கொள்வோம். உனக்கே அடிமைகளாவோம். எங்களுடைய

ஆசைகளில், நோக்கங்களில், காமங்களில் ஏதேனும் குற்றம் குறை இருப்பின் அவற்றை மாற்றி புனிதப்படுத்தி அருள் செய்ய வேண்டும். எனவே மற்றை நம் காமங்கள் மாற்றேலோர். எம்பாவாய் என்கிற நிபந்தனையில் உலகத்தை ரசிக்க பிறந்தவர்களே உத்ரமாவார்கள். உத்ரமே வருக! உத்ரமே அருள்க!

## 4. வேதத்தில் உத்திரம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

மஹாபகாயை வித்மஹே
மஹாச்ரேஷ்டாயை தீமஹி
சுய வீரிய தாதா தீமஹி
உத்ரபல்குநி ப்ரசோதயாத்

உலகம் நலம் பெற செய்திடுவாய்
உபகாரங்கள் அளித்திடுவாய்
சேவை செய்யும் மனத்தினையே
செவ்வென கொண்டாய் நமோ நமோ

இறையருள் ஆசையை வளர்த்திடுவாய்
இன்பம் தரும் சொல் தந்திடுவாய்
விமோசனம் பெற வழிவகுப்பாய்
வீரிய பதியே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. உத்திரம் கவிதை

உருவம் தருவதும், உணர்வு தருவதும் உத்ரமே
அருவம் கனிவதும், அழகும் மிளர்வதும் பத்ரமே
மருவும், மகிழ்வதும் மணமுடன் பயப்பது சத்ரமே
எருவும், கருவும் விசுவம் ஆவது சரித்ரமே

விடியாத இரவுகளுக்கு முடிவுகாணும் விடியலே
படியாத மாடுகளை பழக்கி தீர்க்கும் இனிமையே
வடியாத பாவங்களை வளைத்து ஒழிக்கும் விமோசனமே
அடியாத அதிர்ஷ்டங்கள் உதித்தோடும் உண்மையே

பங்குனி உத்ரமே பங்குனி பல்கலை
தங்குநீ உதவியே மறவாத பல்பதிவு
சங்குநீ சத்யமே சாகசம் பல்முடிவு
எங்குநீ என்றிடுமே இதயம் பல்நினைவு

நன்றியும் நாணயமும் நின்னிரு பக்கங்கள்
குன்றும் குணமும் நின்னிரு தங்கங்கள்
செறிவும் சோர்வும் நின்னிரு அங்கங்கள்
சொந்தமும் பந்தமும் நின்னிரு போட்டிகள்

சுகபோகம் சுடச்சுட பலப்பல யதார்த்தம்
அகம் புறம் தொடத்தொட புதுப்புது பதார்த்தம்
ஜெகம் மகம் கலகலபென களிப்பது நிச்சயம்
அகம் அகம் ஊற்றென உவத்தலே உற்சவம்

எதிலும் எதிர்ப்பல்ல ; எதிர் கட்சி கொறடா
அதிலும் வனப்பல்ல ; புதிர் கட்சி சொத்தா
செதிலும் சேருமே ; அதிர் கட்சி சவாலில்
மதிலும் வளையும் ; தவிர் கட்சி ஆகுமே

## 6. அபிராமி அந்தாதியில் உத்திரம் சக்தி

**நல்லடியார் நட்புப் பெற**

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்

கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்

நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்

பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

**உலகினை வசப்படுத்த**

இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து

வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை

நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்

படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

**தீமைகள் ஒழிய**

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்

திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்

பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கே

எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

**பிரிவுணர்ச்சி அகல**

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்

அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்

இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்

துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் உத்திரம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் ருதவே நம – காலங்களில் வசந்தமே போற்றி

ஓம் ஸுதர்ஸநாய நம – சுய தரிசனமே போற்றி

ஓம் காலாய நம – கால நியம கட்டுப்பாடே போற்றி

ஓம் பரமேஷ்டிநே நம – உயர்ந்த நோக்கமே போற்றி

ஓம் பரிக்ரஹாய நம – பக்தர்களின் கோரிக்கை ஏற்று பலன் அளிப்பவரே போற்றி

ஓம் உக்ராய நம – பயபக்தியை கோள்களுக்கு கூட புகட்டியவரே போற்றி

ஓம் ஸம்வத்ஸராய நம – அனைவருக்கும் உள் உணர்வே போற்றி

ஓம் தக்ஷய நம – உலகம் நலம் பெறச் செய்வோனே போற்றி

ஓம் விஸ்ராமாய நம – மும்மல மிளக்கிய மின்னலே போற்றி

ஓம் விஸ்வதக்ஷிணாய நம – அனைத்து வித்தைகளை விரிவாக அறிந்தவரே போற்றி

ஓம் விஸ்தாராய நம – உலகம் உணரும் அன்பே போற்றி

ஓம் ஸ்தாவரஸ்தாணவே நம – பலமானதும், நிலையானதும் நீயே போற்றி

ஓம் ப்ரமாணாய நம – பிரமாணமான மனசாட்சியே போற்றி

ஓம் பீஜாயாவ்யயாய நம – சம்சாரத்தின் ஆதி விதையே போற்றி

ஓம் அர்த்தாய நம – அனைவரும் நேசிக்கும் ஆனந்தமே போற்றி

ஓம் அநர்த்தாய நம – காதல் கனிந்து கடந்த முழுமையே போற்றி

ஓம் மஹாகோஸாய நம – மானுடம் வென்ற அன்னமே, பிராணனே போற்றி

ஓம் மஹாபோகாய நம – சாதனை சிகரம் கண்ட சிறந்த போகமே போற்றி

ஓம் மஹாதநாய நம – மகாதனம் மனமார செயல்பட்ட கருணையே போற்றி

ஓம் அநிர்விண்ணாய நம – அவசரமோ, அவசியமோ காட்டாத திருப்பதியே போற்றி

ஓம் ஸ்த்தவிஷ்டாய நம – சிறப்பான பிரபஞ்ச நாயகன் மங்கள வாழ்த்துக்களே போற்றி

ஓம் அபுவே நம – பிறவியில்லா சர்வ வியாபியே போற்றி

ஓம் தர்மயூபாய நம – வீட்டில் பூ மனங்கள் விடாமல் ஒட்டும் கைகாட்டியே போற்றி

ஓம் மஹாமகாய நம – நிர்வாண யக்ஞம் நிர்வகிக்கும் நிச்சய பலனே போற்றி

ஓம் நக்ஷத்ரநேமயே நம – நட்சத்திரங்கள் நேசிக்கும் முழு நிலவே போற்றி

ஓம் நக்ஷத்ரிணே நம – நட்சத்திரங்களின் குறிக்கோளே போற்றி

| | |
|---|---|
| ஓம் க்ஷமாய நம | – மகா தந்திரமே போற்றி |
| ஓம் க்ஷமாய நம | – மாறினாலும், பின் மாற்றமில்லா நிலையே போற்றி |
| ஓம் ஸமீஹநாய நம | – புதுபுது அர்த்தங்களே போற்றி |
| ஓம் யஜ்ஞாய நம | – விழிப்புணர்வே போற்றி |
| ஓம் இஜ்யாய நம | – யாகத்தில் தியாகமே போற்றி |
| ஓம் மஹேஜ்யாய நம | – தியாகத்தின் முக்தியே போற்றி |
| ஓம் க்ரதவே நம | – அவிற்பாக பூரணமே போற்றி |
| ஓம் ஸத்ராய நம | – தர்மத்தின் வேதங்களே போற்றி |
| ஓம் ஸதாங்கதயே நம | – முக்தி நிலை தேடுபவர் துணையே போற்றி |
| ஓம் ஸர்வதர்ஸிநே நம | – இன்ப, துன்ப நிலைகளை அறியும் எதிர்காலமே போற்றி |
| ஓம் விமுக்தாத்மநே நம | – இயற்கை சுதந்திரமே போற்றி |
| ஓம் ஸர்வஜ்ஞாய நம | – அனைத்தும் அறிந்தவனே போற்றி |
| ஓம் ஜ்ஞாநமுத்தமாய நம | – சாதிக்கும் பரம உத்தியே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் உத்திரம் சக்தி

ஆப்ரஹ்ம ஜநநீ வர்ணாஸ்ரம விதாயிநீ
நிஜாஜ்ஞாரூப நிகமா புண்யாபுண்யபலப்ரதா

ச் ருதி ஸிமந்த ஸிந்தூரீ க்ருதபாதாப்ஜதூலிகா
ஸீகலாகம ஸந்தோஹசுக்தி ஸம்புடமௌக்திகா

புருஷார்த்தப்ரதாபூர்ணாபோகினீ புவனேச்வரி
அம்பிகா னாதி நிதனா ஹரிப்ரஹ்மேந்த்ர ஸேவிதா

நாராயணீ நாதரூபாநாமரூபா விவர்ஜிதா
ஹ்ரீங்காரி ஹ்மதீ ஹ்ரு:தயாஹேயோபாதேயவர்ஜிதா

ராஜராஜர்ச்சிதாராஜ்ஞரம்யாராஜீவலோசனா
ரஞ்ஜனீ ரமணீ ரஸ்யாரணத்கிங்கிணி மேகலா

ரமாராகேந்து வதனாரதிரூபாரதிப்ரியா
ரக்ஷாகரீ ராக்ஷஸக்னீராமாரமணலம்படா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் உத்திரம் சக்தி

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே

ஆறுமுகமான குரோ அறிந்திட்டேன் உன் மகிமை

இக்கணமே வருவாய் என் ஸ்கந்த குருவே நீ

என்னைக் காத்திடவே எனக்கு நீ அருளிடவே

அரைக் கணத்தில் நீயும் ஆடி வருவாயப்பா

வந்தென்னைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ

அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே

ஸூப்ரஹ்மண்யனே சோகம் அகற்றிடுவாய்

ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய் நீ

ஞான தண்டபாணியே என்னை ஞான பண்டிதனாக்கிடுவாய்

அகந்தையெலாம் அழித்து அன்பினை ஊட்டிடுவாய்

அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வையப்பா

அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி  நிறுத்திவிடு

அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்

உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே

உறுதியாக நானும் பற்றிட  உவந்திடுவாய்

எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய் நீ

அங்கிங்கெனாதபடி எங்கும் அன்பென்றாய்

அன்பே சிவமும் அன்பே சக்தியும்

அன்பே ஹரியும் அன்பே ப்ரம்மனும்

அன்பே தேவரும் அன்பே மனிதரும்

அன்பே நீயும் அன்பே நானும்

அன்பே சத்தியம் அன்பே நித்தியம்

அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்

அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்

அன்பே ப்ரமமமும் அன்பே அனைத்துமென்றாய்

அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்

எங்கும் நிறைந் அன்பே என் குருநாதனப்பா

அன்பில் உறையும் அருட் குருநாதரேதான்

ஸ்கந்தாச்ரமத்தில் ஸ்கந்த குருவானான் காண்

மூவரும் தேவரும்  முனிவரும் போற்றிடவே

ஸ்கந்தாச்ரமந்தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்

ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு

இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு

எல்லையில்லாத உன் இறைவெளியைக் காட்டிடுவாய்

முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே

நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ

உன்னையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்.

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 9. கந்தர் அநுபூதி உத்திரம் சக்தி

கருதா மறவா நெறிகாண, எனக்கு

இருதாள் வனசம் தர என்று இசைவாய்

வரதா, முருகா, மயில் வாகனனே

விரதா, சுர சூர விபாடணனே.(21)

காளைக் குமரேசன் எனக் கருதித்

தாளைப் பணியத் தவம் எய்தியவா

பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்

வேளைச் சுர பூபதி, மேருவையே.(22)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 10. ராகங்களில் உத்திரம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| நாகநந்தினி | யாக பிரியா | ராக வர்த்தினி | ராக வர்த்தினி |

## 11. மூலமந்திரம்

ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வப்ரஸீத

ப்ரஸீத விஸ்வேஸ்வரி வேதரூபிணி

ப்ரஸீத விஸ்வேஸ்வரி மந்த்ர விக்ரஹ

ப்ரஸீத விஸ்வேஸ்வரி விஸ்வப்ரஸீத

## 12. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| அலசி | வாதநாரயண | எட்டி | புங்க |

## 13. பரிகாரம்

- ஆறுகிலோ கோதுமை கோயிலுக்கு தரவும்.
- சிகப்பு நிற பசுவுக்கு ஊறவைத்து பச்சைப்பயிறு தரவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.

- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு மாங்கல்யேஸ்வரர் திருக்கோயில்,** இடையாற்று மங்கலம் - திருச்சி.

Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra